35 M. பாஸ்கர், காரப்பிடாகை
36 R. சிவகுருநாதன், காரப்பிடாகை
37 S. வேலாயுதம், காரப்பிடாகை
38 R. சக்தி, வேட்டைக்காரணிருப்பு
39 N. கார்த்திகேயன், காரப்பிடாகை
40 S. ஜனாநந்தன், காரப்பிடாகை
41 K. வடிவேல் காரப்பிடாகை
42 M. பாலகிருஷ்ணன், காரப்பிடாகை
43 K. சோழராஜன், காரப்பிடாகை
44 M. சதீஸ், திருப்பூண்டி
45 B. சக்திவேல், காமேஸ்வரம்
46 N. துரைராஜன், வேட்டைக்காரணிருப்பு
47 C. ராஜசேகர், வேட்டைக்காரணிருப்பு
48 P. மலர்கொடி, புஸ்பவம் மீனவர் காலனி
49 M. சர்வாசி, புஸ்பவம் மீனவர் காலனி
50 அம்மிணியம்மா, புஸ்பவம் மீனவர் காலனி
51 M.G. ரவிச்சந்திரன், காரப்பிடாகை
52 V.P. செல்வம், காரப்பிடாகை
53 நாகலிங்கம், சிந்தாமணி
54 A. வேலுச்சாமி, சிந்தாமணி
55 S. மோகன், காரப்பிடாகை
56 V. பாலசுப்பிரமணியன், கீழப்பிடாகை
57 R.A. அசோகன், விழுந்தமாவடி
58 K. இரமேஷ், காரப்பிடாகை
59 G. வசுந்திரா, காரப்பிடாகை
60 V. இளையராஜா, காரப்பிடாகை
61 S.T. ரிட்டா, காரப்பிடாகை
62 M. காரிமுத்து, வேட்டைக்காரணிருப்பு
63 N. அஞ்சப்பன், வெளிப்பாளையம்
64 B. குமார் மீனவர் காலனி, புஸ்பவனம்
65 வீராச்சாமி, புதுப்பள்ளி
66 M. பேதையன், புதுப்பள்ளி
67 R. சிரஞ்சீவி, வேட்டைக்காரணிருப்பு
68 G. வெங்கடேஸ், வேட்டைக்காரணிருப்பு
69 R. வீனாமேன் காரப்பிடாகை
70 P. தமிழ்ச்செல்வன், காமேஸ்வரம்
71 பசுமி, புஸ்பவனம்
72 K. சித்திரா, புஸ்பவனம்
73 S. பாவலக்கோடி, புஸ்பவனம்
74 K. அன்னலெட்சுமி, புஸ்பவனம்
75 M. சகிலா, புஸ்பவனம்
76 சகுந்தலா, புஸ்பவனம்
77 சுமதி, புஸ்பவனம்
78 R. நாகவள்ளி, புஸ்பவனம்
79 சாந்தி, புஸ்பவனம்
80 கன்னியம்மாள், புஸ்பவனம்
81 R. செல்லம்மாள், புஸ்பவனம்
82 ஜெயசந்திரா, புஸ்பவனம்
83 K. மின்னல்கொடி, புஸ்பவனம்
84 R. பேபி, புஸ்பவனம்
85 R. ராகவள்ளி, புஸ்பவனம்
86 M. பத்மினி, புஸ்பவனம்
87 K. சாரதா, புஸ்பவனம்
88 P. செல்லத்தங்கம்,
89 K. பன்னீர்செல்வம், விழுந்தமாவடி
90 R. விஸ்வநாதன், காரப்பிடாகை

91 P. சாமிநாதன், காரப்பிடாகை
92 N. நாகராஜ், காரப்பிடாகை
93 சின்னதுரை, காரப்பிடாகை
94 செல்வகுமார், விழுந்தமாவடி
95 A.P. மகேந்திரன், வேட்டைக்காரணிருப்பு
96 K. வீரமணி, சிந்தாமணி
97 K. அய்யப்பன், காரப்பிடாகை
98 N. தாயுமானசுவாமி, காரப்பிடாகை
99 N. பாபு காரப்பிடாகை
100 K. இராசமாணிக்கம், வேட்டைக்காரணிருப்பு
101 G. பாண்டியன், சிந்தாமணி
102 V.R. கோதண்டராமன், சிந்தாமணி
103 S. பாலக்கண்ணு, புஸ்பவனம்
104 V. பன்னீர்செல்வம், வெளிப்பாளையம்
105 செல்லபாண்டி, வெளிப்பாளையம்
106 சிந்துநாச்செல்வம், புதுப்பள்ளி
107 பாலக்கண்ணு, வெளிப்பாளையம்
108 K. பன்னீர்செல்வம், புதுப்பள்ளி
109 கருணாநிதி, காரப்பிடாகை
110 M. பக்கிரிசாமி, வேட்டைக்காரணிருப்பு
111 K. கணேசன், வேட்டைக்காரணிருப்பு
112 V. சிங்கரவேல், வேட்டைக்காரணிருப்பு
113 S. சேமசுந்தரம், வேட்டைக்காரணிருப்பு
114 C. சொக்கலிங்கம், வேட்டைக்காரணிருப்பு
115 M. காமராஜ், வேட்டைக்காரணிருப்பு
116 S. முருகன், காரப்பிடாகை
117 R. கமலக்கண்ணன், காரப்பிடாகை
118 S. முருகானந்தம், காரப்பிடாகை
119 K. சிவலிங்கம், வானமாதேவி மீனவர் தெரு
120 மூர்த்தி, மீனவர் தெரு
121 P. அஞ்சப்பன், மீனவர் காலனி
122 M. ரவிச்சந்திரன், வேட்டைக்காரணிருப்பு
123 R.V. செயராகவன், வேட்டைக்காரணிருப்பு
124 A. வைத்தியலிங்கம், வேட்டைக்காரணிருப்பு
125 V. கருணாநிதி, வேட்டைக்காரணிருப்பு
126 C. பாலகிருஷ்ணன், விழுந்தமாவடி
127 R. அன்பழன், வேட்டைக்காரணிருப்பு
128 S. காளிமுத்து, வேட்டைக்காரணிருப்பு
129 M. நடராஜன், சோமாநந்தபுரம்
130 N. முருகபாண்டி, விழுந்தமாவடி
131 C. காசிநாதர், விழுந்தமாவடி
132 M. கண்ணன், ீ.சு. புரம்
133 A. குஞ்சுபிள்ளை
134 A. சக்திவேல், காமேஸ்வரம்
135 M. லிங்கேஷ், புதுப்பள்ளி
136 K. அன்புமணி, புதுப்பள்ளி
137 M. கோடிராஜ், சோழவித்தியாபுரம்
138 V. காளிமுத்து, வேட்டைக்காரணிருப்பு
139 M. பாலகுமார், வேட்டைக்காரணிருப்பு
140 M. தமிழ்செல்வன், வேட்டைக்காரணிருப்பு
141 K. முருகையன், வேட்டைக்காரணிருப்பு
142 T. அருள், வேட்டைக்காரணிருப்பு
143 M. இராமசாமி, வேட்டைக்காரணிருப்பு
144 V. மோகன், வேட்டைக்காரணிருப்பு
145 A. மதியழகன், வேட்டைக்காரணிருப்பு
146 S. சுரேஷ், வேட்டைக்காரணிருப்பு

147 R. ரஜினி, வேட்டைக்காரணிருப்பு
148 T. முருகையன், வேட்டைக்காரணிருப்பு
149 T. தென்னரசு, வேட்டைக்காரணிருப்பு
150 V. பன்னீர்செல்வம், வேட்டைக்காரணிருப்பு

உதவி சுற்றுச் சூழல் பொறியாளர் , தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், நாகப்பட்டினம் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர், நிறுவனத்தின் உரிமையாளர்கள் மற்றும் பொது மக்களை வரவேற்றார்.

நிறுவனத்தின் சார்பில் அதன் தொழில் நிறுவனத்தின் தொழில் ஆலோசகர் திரு. பாலசுப்பிரமணியன் இத் திட்டம் தொடர்பான விரிவான அறிக்கையினை பொது மக்களுக்கு விளக்கினார்.

புனேவைச் சேர்ந்த M/s. ISMT மற்றும் சென்னையைச் சேர்ந்த ட்ரைடெம் குழும் நிறுவனங்களின் கூட்டு முயற்சியான M/s. ட்ரைடெம் போர்ட் அன்டு பவர் கம்பெனி பிரைவேட் லிமிடெட் தமிழ்நாடு அரசின் எரி சக்தி துறையின் கடிதம் (10.09.2007 தேதியிட்ட கடித எண். 84)மூலம் நாகப்பட்டினம் மாவட்டத்தில் 2000 மெகாவாட் திறன் உடைய ஒரு மெர்ச்சன்ட் அனல் மின் நிலையத்தை அமைப்பதற்கு அனுமதி பெற்றுள்ளது. நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள வேட்டைக்காரணிருப்பு கிராமத்தின் அருயேயுள்ள திருக்குவளை கடலோரப் பகுதியில் ஒரு கடல்சார்

துறைமுகத்தை அமைப்பதற்கும் நெடுஞ்சாலை துறையானது டிபிபிஎல்-க்கு அனுமதி வழங்கியுள்ளது (அரசாணை எண். 111 நாள் 28.04.2008).

கீழ் குறிப்பிட்டுள்ளபடி மின் உற்பத்தி திட்டத்தை செயல்படுத்துவதற்கு டிபிபிஎல் முடிவு செய்துள்ளது.

அட்டவணை

யூனிட் எண்.	மொத்த திறன்	அமைப்பு
யூனிட் -1	500 மெ.வா யூனிட்	சப்-க்ரிடிகல்
யூனிட் -2	660 மெ.வா. யூனிட்	சூப்பர் க்ரிடிகல்
யூனிட் -3	660 மெ.வா. யூனிட்	சூப்பர் க்ரிடிகல்

திட்டமிடப்பபட்டுள்ள மின் நிலையம் மொத்த நிறுவப்படும் திறனானது ஜெனரேட்டர் டெர்மினலில் 1820 மொ.வா. ஆகும்.

அனல் மின் நிலையத்தின் வகை, நிலையத்தின் தேவைகள் (அதாவது, நிலம் நீர் மற்றும் எரிபொருள்) கள அம்சங்கள் , அனல் மின் நிலைய அம்சங்களின் அமைப்பு ஆற்றல் வெளியேற்றம், திட்ட செயலாக்கத்திற்கான திட்டவரைவு மற்றும் திடடமிடப்பட்டுள்ள அனல் மின் நிலையத்திற்கான நிதித் தேவைகள் போன்ற திட்ட விவரங்களை தொகுப்பதே இந்த அறிக்கையின் நோக்கமாகும். கூட்டு முயற்சி அடிப்படையில் திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தக் குறிப்பு ஒன்று பவர் டிரேடிங் கார்பொரேஷனுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

அனல் மின் நிலயத்தின் வகை:

திட்டமிடப்பட்டுள்ள மின் உற்பத்தித் திட்டமானது, ஒரு (1) 500 மொ.வா. மொத்த திறன் கொண்ட யூனிட்டும் இரண்டு (2) 660 மொ.வா. மொத்தத் திறன் கொண்ட யூனிட்டுகளையும் உடைய நிலக்கரி அடிப்படையிலான அனல் மின் நிலையத் திட்டமாகும்.

யூனிட் 1 சப்-க்ரிடிகல் தொழிற் நுட்பத்தையும் யூனிட் 2 மற்றம் யூனிட் 3 ஆகிய சூப்பர் க்ரிடிகல் தொழில்நுட்பத்தையும் கொண்டிருக்கும்.

திட்டமிடப்பட்டுள்ள அனல் மின் நிலையத்திற்காக முக்கிய எரிப்பொருள் இந்தோனேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும். இருப்பினும் இந்தோனேசியாவிலிருந்து நிலக்கரி பெறுவதில் ஏனும் சிக்கல் ஏற்படும்

நிகழ்வில் இந்திய நிலக்கரியை மாற்று எரிபொருளாக பயன்படுத்தக்கூடிய வகையில் அனல் மின் நிலைய யூனிட்டுகள் வடிவமைக்கப்படும்.

இயந்திர வடிவமைப்பின் ஆயுட்காலம் 25 ஆண்டுகள் இருக்கக்கூடிய வகையில் அடிப்படை லோடு இயக்கத்திற்கு ஏற்ப இந்தநிலையம் வடிவமைக்கப்படும்.

கள அமைவிடம், அம்சங்கள் மற்றும் களத்திற்கான அணுக்கம்:

திட்டமிடப்பட்டுள்ள அனல் மின் நிலையத்திற்கான அமைவிடம் நாகப்பட்டினம் மாவட்டத்தின் தென்கிழக்கு பகுதியிலுள்ள வேட்டைக்காரணிருப்பு கிராமத்திற்கு அருகிலுள்ள திருக்குவளை கடலோரப் பகுதியிலிருந்து சுமார் 3-4 கிமீ தூரத்தில் அமைந்துள்ளது.

புதுப்பள்ளி வாய்க்கால் (ஓடை/நீரோட்டம்) திட்ட களத்தின் குறுக்காக ஓடி, கிழக்குப்பகுதியில் (திட்ட களத்தின் எல்லையிலிருந்து) சுமார் 3.5 கி.மீ. தூரத்தில் வங்கக் கடலுடன் இணைவதுடன், மேற்குப்பகுதியில் (திட்ட களத்தின் எல்லையிலிருந்து) சுமார் 0.5 கி.மீ. தூரத்தில் ஹரிச்சந்திரா நதியுடன் இணைகிறது. தரிசு நிலங்களின் தர நிலை, மையக் கடல் நிலையை அடிப்படையாகக் கொள்ளும்போது -0.40 மீ முதல் + 0.40 மீ வரை வேறுபடும் (வாய்க்கால் மற்றும் ஆற்றின் அணைகள் நீங்கலாக) அனல் மின் நிலைய களத்தின் குறிப்பிட்ட பகுதிகள், துறைமுகம் மற்றும் அருகிலுள்ள பகுதிகளிலிருந்து தோண்டியெடுக்கப்பட்ட மணலைக் கொண்டு பொருந்தும் வகையில் (MSL க்கு மேல் 1.5 மீ முதல் 2.5 மீ. வரை) மேடாக்கப்படும்.

திட்டக் களம் சென்னையிலிருந்து தெற்காக சுமார் 350 கி.மீ. தூரத்திலும், நாகப்பட்டினம் டவுனிலிருந்து 23 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. திட்ட களத்தின் கிழக்கு எல்லையிலிருந்து சுமார் 4.5 கி.மீ. தள்ளி கிழக்கு கடற்கரைச் சாலை (இசிஆர்) அமைந்துள்ளது. பிரதான மாவட்ட சாலையிலிருந்து (எம்டிஆர்) அணுக்க சாலை ஒன்றின் மூலமாக திட்ட களத்தை அணுக முடியும் மற்றும் இரு இசிஆரையும் வேதாரண்யத்தையும் இணைக்கிறது. எம்டிஆர், திட்ட களத்தின் கிழக்குப் பகுதியில் 0.5 முதல் 1.0 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது.

மிக அருகாமையிலுள்ள அகல இரயில் பாதையானது நாகை டவுனில் உள்ளது. மேலும், நாகப்பட்டினத்திலிருந்து திருக்குவளைக்கு அகல இரயில் பாதையை விரிவுபடுத்தும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது. இது அனல் மின் நிலைய அமைவிடத்திற்கு மிக அருகில் செல்லத்தக்க வகையில் அமைந்திருக்கும்.

மிக அருகிலுள்ள விமான நிலையம் திருச்சிராப்பள்ளியில் அமைந்துள்ளது மற்றும் மிக அருகாமையிலுள்ள கடல் துறைமுகம் நாகப்பட்டினத்தில் உள்ளது.

வானிலையில் தரவு:

திட்ட விவரங்கள் மற்றும் வானிலையியல் தரவு :

01. சுற்றுப்புற காற்றின் வெப்ப நிலை அதிகபட்ச உலர் பல்பு வெப்பநிலை 42 டிகிரி செ.
02. குறைந்த பட்ச உலர் பல்பு வெப்பநிலை 16.8 டிகிரி செ.
03. சராசரி ஈரப்பதம் அதிக பட்சம் : (கோடை) : 75%
04. சராசரி குறைந்தபட்ச ஈரப்பதம் : (கோடை): 60 %
05. அதிக பட்ச ஈரப்பதம் (பருவமழை) : 80%
06. குறைந்த பட்ச ஈரப்பதம் (பருவமழை) : 65%
07. மழை ஆண்டுக்கான மழை (அதிகபட்சம்) : 1403 மிமீ
08. ஆண்டுக்கான மழை (குறைந்த பட்சம்) : 450. 5 மி.மீ
09. இருபத்தி நான்கு மணிநேரம் : 481 மி.மீ.

நிலத் தேவை:

திட்டமிடப்பட்டுள்ள இந்த மின் நிலைய திட்டத்தை செயல்படுத்துவதற்காக ஏறத்தாழ 743.79.5 ஹெக்டேர் (சுமார் 1835 ஏக்கர்) புறம்போக்கு (தரிசு) நிலம் தமிழ்நாடு அரசினால் 99 ஆண்டுகளுக்கு குத்தகையாக டிபிபிசிஎல்லுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் தாலுக்காவைச் சேர்ந்த கீழப்பிடாகை, காரப்பிடாகை (வடக்கு) காரப்பிடாகை (தெற்கு) மற்றும் விழுந்தமாவடி கிராமங்களில் இந்த நிலம் அமைந்துள்ளது. ஏறத்தாழ 770.00 ஏக்கர் பரப்பளவு நிலம் புதுப்பள்ளி கால்வாயின் வடக்குப் பக்கத்தில் அமைந்துள்ளது. மற்றும் சுமார் 1065 ஏக்கர் நிலம் புதுப்பள்ளி கால்வாயின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ளது.

திட்ட களத்தின் அமைவிடத்தைக் கருத்தில் கொள்ளும்போது பிரதான மின் நிலையப் பகுதி, நிலக்கரி சேமிப்புக் கிடங்கு மற்றும் சாம்பல் அகழிப் பகுதி ஆகியவை 770 ஏக்கர் பரப்பளவுவில் புதுப்பள்ளி கால்வாயின் வடக்குப் பகுதியில் அமைக்கப்படும்.

தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ள நிலமான பொதுவாக தாவரங்களை வளர்ப்பதற்கு ஏற்ற இடமல்ல. எனவே இவ்விடத்தில் பசுமையை அளிக்கும் தாவரங்களை உருவாக்க இயலாது. பசுமையான தாவரங்களை வளர்ப்பதற்காகவும் டவுன்ஷிப்பை உருவாக்கவும் புதுப்பள்ளி கால்வாயின் வடக்கு திசையில் திட்ட இடத்தைச் சுற்றி மேலும் 780 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த டிபிபிசில் திட்டமிட்டுள்ளது. எனவே, புதுப்பள்ளி கால்வாயின் வடக்கு திசையில் திட்டமிட்டுள்ள அனல் மின் நிலைய திட்டத்திற்காக கிடைக்கக் கூடிய மொத்த பரப்பளவு நிலம் சுமார் 1500 ஏக்கர்களாகும். இது புதுப்பள்ளி கால்வாயின் வடக்கு திசையில் இருப்புப் பகுதியாக சுமார் 50 ஏக்கரை கணக்கிட்டபின் உள்ள அளவாகும்.

புதுப்பள்ளி கால்வாயின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள (சுமார் 1065 ஏக்கர்) நிலம், அனல் மின் நிலைய கட்டிடங்களுக்காக பயன்படுத்தப்படமாட்டாது.

திட்டமிடப்பட்டுள்ள அனல் மின் நிலையத்திற்கான நிலத் தேவையை கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை விளக்குகிறது.

நிலத் தேவை

வ.எண்.	விளக்கம்	பரப்பளவு (ஏக்கர்)
01	பிரதான மின் நிலையப் பகுதி	295
2	நிலக்கரி சேமிப்பிடம் மற்றும் கன்வேயர்	295
3	சாம்பல் அகழிப் பகுதி	160
4	வெளியேற்ற மற்றும் இதர பாதைகள்	200
	துணைக் கூட்டல் மதிப்பு (1 முதல் 3 வரை)	950
5	டடுவுன்ஷிப்	100
6	பசுமைப் பகுதி	500
	துணைக் கூட்டல் மதிப்பு (5 முதல் 6 வரை)	600
	மொத்தம்	1550

பிரதான மின்நிலையப் பகுதி சுமார் 2.5 மீ (MSL-க்கு மேல்) மேடாக்கப்படும். அதே சமயம், டவுன்ஷிப் மற்றும் நிலக்கரி சேமிப்பிட்ட பகுதிகள் புதுப்பள்ளி வாய்க்காலுக்கு மழை நீர் சரியான முறையில் வடிந்து செல்வதற்கு ஏதுவாக முறையே 1.0 மற்றும் 1.5 மீ (MSL-க்கு மேல்) மேடாக்கப்படும் சாம்பல் அகழி மற்றும் பசுமைப் பகுதியில் தரிசு நிலத்தின் சமநிலை இயன்றவரை அப்படியே வைக்கப்படும். தோண்டியெடுக்கப்படும் பொருளின் தேவை. அகழிச் சுவருக்கு ஏற்படும் மண் தேவையையும் கணக்கில் கொண்டபின் சுமார் 9.5 மில்லியன் கன அடி (M3) ஆகும். மற்றும் இத்தேவையானது திட்டமிடப்பட்டுள்ள டிபிபிஎல்லின் துறைமுகக் களத்திலிருந்து தோண்டியெடுக்கப்படும் மண்ணைக் கொண்டு பூர்த்தி செய்யப்படும்.

இந்தோனேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியே, திட்டமிடப்பட்டுள்ள இந்த மின் நிலையத்தின் பிரதான எரிபொருளாக விளங்கும். இருப்பினும் எதிர்பாராத காரணங்களால் இந்தோனேசியாவிலிருந்து நிலக்கரி இறக்குமதி

செய்யப்படுவது பாதிக்கப்பட்டால் மற்றும் நெருக்கடியான சூழ்நிலைகள் தோன்றினால், இந்தியாவிலிருந்து அல்லது பிற ஆதாரங்கள் மூலமாக கிடைக்கம் நிலக்கரியானது பாய்லர்களில் எரிக்கப்படும். இதனைக் கருத்தில்கொண்டு ஒப்பீட்டுரீதியில் குறைவான கலோரி:.பிக் மதிப்பும் அதிகளவு சாம்பல் அளவையும் கொண்டுள்ள இந்திய நிலக்கரியையும் பயன்படுத்துவதற்கு ஏற்றார்போல் இந்த மின் நிலையம் வடிவமைக்கப்பட உள்ளது.

இந்தோனேசியாவிலுள்ள மத்திய காலிமந்தான் மாகாணத்தில் நிலக்கரி பகுதிகளை டிபிபிசிஎல் கையகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிலக்கரி பகுதிகளில் கணக்கிடப்பட்டுள்ள மொத்த நிலக்கரி இருப்பு சுமார் 200 மில்லியன் டன்களாகும். அனல் மின் நிலையத்தின் 25 ஆண்டு ஆயுள் காலத்தின் மொத்த தேவைக்கும் கணிக்கப்பட்டுள்ள இந்த நிலக்கரி இருப்பு போதுமானதாக இருக்கும். மீதமுள்ள அதிகப்படியான நிலக்கரி, இந்தியாவில் உள்ள மொத்த கொள்முதலாளர்களுக்கு வர்த்தகரீதியாக அளிக்கப்படும்.

அனல் மின் நிலைய திறன் அம்சத்தை (PLF) 85 சதவீதம் என வைத்துக்கொண்டால் இந்தோனேசிய மற்றும் இந்திய நிலக்கரியின் மொத்த கலோரி:.பிக் மதிப்பானது முறையே சுமார் கிலோவுக்கு 5909 கிலோ கலோரி மற்றும் கிலோவுக்கு 4353 கிலோகலோரியாக இருக்கும். மற்றும் டிசைன் வெப்ப விகிதம், 100 சதவீத அடிப்படை லோடாகவும் இருக்கும். திட்டமிடப்பட்டுள்ள இந்த மின் நிலையத்தின் ஆண்டுகளாக நிலக்கரி தேவை பின்வரும் அட்டணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

நிலக்கரி தேவை

விவரங்கள்	யூனிட் -1ல் (மில்லியன் tpa)	யூனிட் -2 மற்றும் யூனிட் 3 (மில்லியன் tpa)
இந்தோனேசிய நிலக்கரி (முக்கிய எரிபொருள்)	1.38	3.55
இந்திய நிலக்கரி (மாற்று எரிபொருள்)	1.92	4.93

அனல் மின் நிலைய எல்லைக்குள் நொறுக்கப்படாத நிலக்கரி 0.781 மில்லியன் டன் மற்றும் நொறுக்கப்பட்ட நிலக்கரி 0.342 மில்லியன் டன் சேமிப்பதற்காக சேமிப்பிட வசதிக்கு திட்டமிடப்பட்டுள்ளது. இது இந்தோனேசிய நிலக்கரி அனைத்து பாய்லர்களிலும் (யூனிட்டுகள் 1 , 2 மற்றும் 3) பயன்படுத்தப்படும்போது 100 சதவீத அடிப்படை லோடு உள்ள சூழ்நிலையில் சுமார் 70 நாட்களுக்குத் தேவைப்படும் நிலக்கரி தேவையை பூர்த்தி செய்யும்.

குளிர்ந்த நிலை தொடக்கம் மற்றும் தொடக்கநிலை வெப்பமேற்றுவதலுக்கும் லேசான எரிப்பொருள் எண்ணெயும் மற்றும் நிலைப்படுத்தலுக்கு கன எரிபொருள்

எண்ணெயும் பயன்படுத்தக்கூடிய வகையில் பாய்லர் வடிவமைக்கப்பட்டிருக்கும். கன எரிபொருள் எண்ணெயும் லேசான எரிபொருள் எண்ணெயும் டேங்கர்களில் சாலை வழியாக மின் நிலையத்திற்கு கொண்டு வரப்படும்.

ஆண்டுக்கான இரண்டாம்நிலை எரிபொருளின் தேவை குளிர்ந்த நிலை தொடக்கம் மற்றும் எரிபொருள் தீச்சுடர் நிலைப்படுத்தலுக்கம் பயன்படுத்தப்படும் கன எரிபொருள் எண்ணெயும் லேசான எரிபொருள் எண்ணெயும் ஒவ்வொரு ஆண்டும் யூனிட் 1க்கு 2975 டன்களும் யூனிட் 2 மற்றம் யூனிட் 3-க்கு ஆண்டுதோறும் 7855 டன்களும் தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

நீர்த் தேவை:

திட்டமிடப்பட்டுள்ள இந்த மின் நிலையத்திற்கு தேவைப்படும் நீரானது கடலிலிருந்து முறையான நீர் சுத்திகரிப்புக்குப்பின் எடுத்துக் கொள்ளப்படும். பயன்பாட்டிற்குத் தேவைப்படும் தண்ணீரைப் பெறுவதற்காக உரிய சுத்திகரிப்புக்கு முந்தைய மற்றும் ரிவர்ஸ் ஆஸ்மாஸிஸை (ஆர்.ஓ.) அடைப்படையாக்க கொண்ட கேப்டிவ் டிஸாலினேஷன் நிலையம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

மின் நிலையத்தின் குளிர்விப்பு நீர் (CW) அமைப்பதற்கு தேவையான மேக் அப் நீரும் கடல் நீரிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும்.

திட்டமிடப்பட்டுள்ள மின் நிலையத்திற்காக மதிப்பிடப்பட்டுள்ள கடல் நீர் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

கடல் நீர் தேவை

விவரங்கள்	யூனிட் 1 (M3/ஒரு மணி நேரத்திற்கு)	யூனிட் -2 மற்றும் 3 (M3/ ஒரு மணி நேரத்திற்கு)
கடல் நீர் உவர்ப்பு நீக்க நிலையத்திற்காக எடுக்கப்படும் நீர் (தினசரி 20 மணி நேர இயக்கம்)	805	1610
குளிர்ப்பு டவர் மேக்-அப்	5256	13600
மொத்தம்	6061	15210

மின் நிலையத்தின் பயன்பாட்டு நீர்த் தேவையின் பிரிவுகள் (டவுன்ஷிப்பையும் சேர்த்து) கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

பயன்பாட்டு நீர்த் தேவை

விவரங்கள்	யூனிட் 1 (M3/பிரதி தினம்)	யூனிட் -2 மற்றும் 3 (M3/ பிரதி தினம்)
சேவைக்கான நீர்	900	1800
குளிர் சாதனம் மற்றும் காற்றுவசதி அமைப்பு	480	960
சாம்பல் கையாளும் அமைப்பு	3720	7680
DM நீர் சாதன பயன்பாட்டிற்கு (இது குடிநீர் கலவையைம் ஒரு பகுதியாகக் கொண்டுள்ளது)	2100	4240
நிலக்கரி கையாளும் அமைப்பின் தேவைகள் மற்றும் தூசு கட்டுப்பாடு அமைப்பு	960	1880
இதர தேவைகள்	4240	280
மொத்த பயன்பாட்டு நீர்த் தேவை	28400	16840

திட்டமிடப்பட்டுள்ள மின் நிலையத்திற்காக மதிப்பிடப்பட்டுள்ள பயன்பாட்டு நீர்த் தேவையாது சுமார் 25,240 M3/பிரதி தினம் (25.24 MLD) இது டிபிபிசிஎல்லின் டவுன்ஷிப் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள துறைமுகம் ஆகியவற்றுக்குத் தேவையான 825M3/ மணி நேரம் நீரையும் உள்ளடக்கியதாகும். இந்த மொத்த பயன்பாட்டு நீர்த் தேவையில் யூனிட் 1ன் கழிவு நீரின் சுமார்

2640 M3 மணிநேர சுத்திகரிப்பும் யூனிட் 2 மற்றும் யூனிட் 3ன் கழிவு நீரின் சுமார் 5320 M3 /மணிநேர சுத்திகரிப்பும் செய்யப்பட நீர் மறுசுழற்சி செய்யப்படும். சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரின் மறுசுயற்சியுடன் கடல் நீர் ஆர் ஓவின் (SWRO)வடிகாலில் நிகர நீர்த் தேவையானது சுமார் 17.280 M3 /பிரதி தினம் (17.28 MLD) ஆக இருக்கும். பயன்பாட்டு நீருக்காகவும் CW மேக்-அப்புக்காகவும் தேவைப்படும் மொத்த கடல் நீர் (SWRO) மூலம் மீட்கப்படும் (35 சதவீதத்தையும் கருத்தில் கொள்ளும்போது) சுமார் 0.51 மில்லியன் M3/பிரதி தினம் ஆகும்.

மின் நிலையத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் கழிவுநீர் வெளியேற்றம், திட்டமிடப்பட்டுள்ள மின் நிலையத்தின் யூனிட் 1 லிருந்து சுமார் 112.89 MLD மற்றும் யூனிட் 2 மற்றும் யூனிட் 3 லிருந்து சுமார் 285.300 MLD ஆகும். குளிர்ப்பு நீர் அமைப்பின் குளிர்ந்த நீர் பகுதியிலிருந்து CW குளிர்ப்பு திட்டமிடப்பட்டுள்ளதால் கடலுக்கு திரும்ப வரும் வெளியேற்ற நீரின் வெப்ப அதிகரிப்பானது சுற்றுப்புறத்தை ஒத்ததாகவே இருக்கும். கடலுக்குச் செல்லும் கழிவு நீரில் கரைக்கப்பட்டுள்ள திண்மங்களின் மொத்த அளவானது மின் நிலையத்திற்கு உள்வரும் கடல் நீரில் உள்ளதைப் போன்று 1.25 மடங்கு இருக்கும்.

மின் ஆற்றலை வெளியேற்றுதல்:

திட்டமிடப்பட்டுள்ள மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சக்கதியானது, திருச்சிராப்பள்ளியில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 400 கி.வா. க்ரீடிற்கு கொண்டு செல்லப்படும். இது மின் நிலைய இடத்திலிருந்து 140 கி.மீ. தொலைவில் உள்ளது. மேலும் டிபிபிசிஎல்லானது மின் உற்பத்தி நிலையத்திற்கு அருகிலேயே பவர் கிரிட் கார்ப்பரேஷன் லிமிடெடின (PGGL) 400 கேவி கிரீடிற்கு மின்சக்தியை கொண்டு செல்வதற்கான சாத்தியங்கள் குறித்தும் ஆராய்ந்து வருகிறது.

திட்டமிடப்பட்டுள்ள மின் நிலையத்திலிருந்து விற்பனை செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் ஆற்றல் மற்றும் மின்சக்தி பற்றிய விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

மின் ஆற்றலை வெளியேற்றுதல்

விவரங்கள்	யூனிட்-1	யூனிட் 2 மற்றும் யூனிட் 3
மொத்த உற்பத்தி –மெ.வா.	500 மெ.வா	2 X 660 மெ.வா
துணை மின் ஆற்றல் மற்றும் ஸ்விட்ச்யார்ட் வரையிலான இழப்பு (7.5 %) மெ.வா.	3750	99.00
ஸ்விட்ச்யார்டிலிருந்து டேக்ஆ..ப் நிலை வரையிலான டிரான்மிஷன் இழப்பு 4% மெ.வா.	18.50	48.84
வெளியேற்றப்பட வேண்டிய மொத்த மின் ஆற்றல் -மெ.வா.	444.0	1172.16
85% ஆண்டுக்கான நிலைய லோடு அம்சத்தின்படி வெளியேற்றப்பட்ட வேண்டிய மின் ஆற்றல் -மில்லியன் KWh/ஆண்டுதோறும்	3306.02	8727.90

மின்நிலைய தரநிர்ணயம், கிடைக்கும் தன்மை, மின் நிலைய லோடு அம்சம் (PLF)

திட்டமிடப்பட்டுள்ள மின் நிலையத்தின் நிறுவப்பட்டுள்ள மொத்தத் திறன் பின்வரும் கள நிலைகள் மற்றும் வடிவமைப்பு அம்சங்களுக்கேற்ப குறிப்பிட்ட ஜெனரேட்டர் டெர்மினல்களில் சுமார் 1 X 500 மெ.வா. மற்றும் 2 X 660 மெ.வா. ஆக இருக்கும்.

சுற்றுப்புற காற்றின் வெப்ப நிலை 40 டிகிரி செ. ஆக இருத்தல். மின் நிலையத்திற்கு தேவைப்படும் குளிர்ந்த நீருக்கான மேக்-அப் ஆக கடல் நீர் பயன்படுத்தப்படுதல்.

டிசைன் கன்டென்ஸர் குளிர்ந்த நீர் உள்வரும் வெப்பநிலை 33 டிகிரி செ. ஆக இருத்தல் மற்றும் கன்டென்ஸரில் ஏற்படும் வெப்பநிலை அதிகரிப்பானது 9 டிகிரி செ. ஆக இருத்தல்.

ஜேனரேட்டரின் மின் ஆற்றல் அம்சம் 0.85 ஆக இருத்தல்.

மின் சாதனத்திற்கு டிசைன் வெப்பநிலை 50 டிகிரி செ. ஆக இருத்தல்.

நீராவி டர்பைனின் VWO திறன், அமைக்கப்பட்டுள்ள டர்பைன்-ஜெனரேட்டரின் அதிகபட்ட தொடர் நிர்ணயத்திற்கும் (MCR) மேலாக சுமார் +5% இருக்க வேண்டும். மற்றும் VWO நிலைகள் மற்றும் இதர துணை நீராவித் தேவைகளுக்குப் பொருந்தும் வகையில் பாய்லரின் அதிகபட்ட தொடர் நிர்ணயம் (BMCR) அமைக்கப்படும். சீரமைப்புகளுக்கு நடுவே டர்பைன் பிளேடுகளில் ஏற்படும் உப்புப் படிவங்கள் மற்றும் பழுதுகள் போன்றவற்றால் ஏற்படும் தேய்மானத்திற்குப் பிறகும், நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தியை அளிப்பதற்கு ஏதுவாக யூனிட்டுகளின் திறனளவுகள் தேர்ந்தெருக்கப்படுகின்றன.

அமைப்பின் அளவை நிர்ணயிப்பதற்கும் உற்பத்திக்கான செலவை கணக்கிடுவதற்கும் கருத்தில் கொள்ளப்படும் மின் நிலைய லோடு அம்சம் (PLF) 85% ஆகும். மற்றும் மின் நிலைய கிடைக்கும்நிலை சுமார் 90% ஆகும்.

திட்ட நிறைவுக்கான அட்டவணை:

திட்டமிட்டுள்ள அனல் மின் நிலையத்தின் யூனிட் 1 அதாவது 1 X 500 மெ.வா யூனிட், பவர் ஜலண்ட் எக்விப்மென்ட்டுக்கான அளிப்புக் கடித (LoA) தேதியிலிருந்து (பூஜ்ய தேதி) சுமார் 48 மாதங்களில் வர்த்தக ரீதியாக இயங்கத் தொடங்கும். யூனிட் 1க்கான பூஜ்ய தேதி 1 அக்டோபர் 2009 என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

திட்டமிட்டுள்ள அனல் மின் நிலையத்தின் யூனிட் 2 மற்றும் 3 ஆகியவை பவர் ஜலண்ட எக்விப்மென்டுக்கான அளிப்புக் கடித (LoA) தேதியிலிருந்து (பூஜ்ய தேதி) சுமார் 60 மாதங்களில் வர்த்தக ரீதியாக இயங்கத் தொடங்கும். இந்த யூனிட்டுகளுக்கான பூஜ்ய தேதிகள் முறையே 1 அக்டோபர் 2010 மற்றும் 1 அக்டோபர் 2011 ஆகும்.

கூட்ட அமைப்பாளர் (உதவி சுற்றுச் சூழல் பொறியாளர்) பொது மக்களை கருத்துக் கூறுமாறு கேட்டுக் கொண்டார்.

1.திரு. சி. இராசசேகரன், வேட்டைக்காரணிருப்பு:

இத்திட்டம் அமைவதை எதிர்க்கிறேன். இத்திட்டத்தினால் சுற்றுச் சூழல் மாசு ஏற்படும். இத் திட்டம் டாக்டர் எம்.எஸ். சாமிநாதன் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவிற்கு எதிரானது. இதன் மூலம் ஏற்படும் கழிவு நீர் காரணமாக கடல் வாழ்

உயிரினங்களுக்கு பாதிப்பு ஏற்படும். பறவைகள் சரணாலயத்தின் 10 கி.மீ. தொலைவில் அமைவதால் அயல் நாட்டு பறவைகள் இங்கு இடம் பெயர்வது பாதிக்கப்படும். இந் திட்டத்தின் மூலம் ஏற்படும் வெப்ப அலைகளை எவ்வாறு கட்டுப்படுத்துவார்கள்?

02. திரு. கலைமாறன், புதுப்பள்ளி:

இத்திட்டம் அமைவதை எதிர்கிறேன். ஏனென்றால், இத்திட்டம் 9,100 கோடி செலவில் 244.7 ஹெட்டேர் நிலப்பரப்பில் அமைய உள்ளது. இத்திட்டமானது 1820 மெ.வா. மின் உற்பத்தி செய்கிறது. ஆதலால் 25,000 மக்கள் இடம்பெயர்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. நாங்கள் எண்ணூர் பவர் பிளாண்ட் நிறுவனத்திற்கு சென்று பார்வையிட்டோம். அங்கு அதன் 210 மெ.வா. அளவு மின் உற்பத்தி செய்கின்றனர். அந்த நிறுவனத்தின் 6 கி.மீ. தொலைவில் எந்தவித குடியிருப்பும் இல்லலை. ஆதலால் இத்திட்டம் இங்கு வந்தால் 20 கி.மீ. தொலைவில் வந்தால் மக்கள் யாரும் இங்கு வசிக்க முடியாது. அதுமட்டும் அல்லாமல் இங்கு செய்யப்படும் விவசாயமானது மாங்காய், முந்திரி, பலா போன்ற பயிர்கள் விளைவிக்க இயலாது. இங்கு 2500 மீனவ மக்கள் வசித்து வருகின்றனர். அவர்களுக்கும் சரியான தொழில் இல்லாமல் பாதிக்கப்படுவார்கள். இந்த திட்டம் அயல் நாட்டில் செய்யக் கூடிய திட்டமாகும். இங்கு இத்திட்டம் இங்கு செயல்பட முடியாது.

03. திரு.சாமிக்கண்ணு, சிந்தனை சிற்பி மீனவர் அமைப்பு:

இத்திட்டம் இங்கு அமைவதை எதிர்கிறேன். இத்திட்டம் இங்கு அமைந்தால் அதன் மூலம் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்பால் பழையார் முதல் கோடியக்கரை வரை உள்ள மீனவர்கள் பாதிக்கப்படுவார்கள். இத்திட்டத்தால் முத்துப்பேட்டையில் உள்ள சதுப்பு நிலக் காடுகள் பாதிக்கக் கூடும். எண்ணூர் அனல் மின் நிலையத்தின் மூலம் பக்கிம்ஹாம் கால்வாயில் வெளியேற்றப்படும் கழிவுகளினால் 24 மீனவ கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் மூலம் வெளியேற்றப்படும் சாம்பல் கழிவு நிலத்தையும், கடல் நீரையும் மாசு படுத்தும்.

4. திரு. ராம. இளம்பரிதி , விழுந்தமாவடி:

இத் திட்டம் அமைவதை வரவேற்கிறேன். இத்திட்டம் 10,000 கோடி செலவில் ஆரம்பிக்கப்பட உள்ளது. இது ஒரு தெர்மல் பவர் பிளாண்ட் , அனு மின் ஆலை அல்ல. இதனால் எந்த வித பாதிப்பும் ஏற்படாது. மின் பற்றாக்குறையும். குறையும். வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும். அனல் மின் நிலையத்தின் புகை போக்கி 275 மீட்டர் அமையும் என சொல்கிறார்கள். இந்த புகைபோக்கியின் அளவை இரண்டு மடங்காக உயர்த்த வேண்டும். இந்த கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்த பிறகே மற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும். மக்கள் தொகை அதிகரிப்புக்கு ஏற்ற அளவு மின்சாரம் தேவைப்படுகிறது. எனவே இந்த தொழிற்சாலை கண்டிப்பாக வரவேண்டும்.

5. திருமதி. ஆர். இளவரசி, புதுப்பள்ளி ஊராட்சி மன்ற துணைத் தலைவர்:

எண்ணூர் பவர் பிளாண்டில் 210 கி.வா. மின் உற்பத்தி செய்யப்படுகிறது. அங்கு 6 கீ.மீ. தொலைவில் எந்த வித குடியிருப்பும் இல்லை. இப்பகுதியானது விவசாய நிலமாக உள்ளது. இங்கு அதிகம் படிக்காத மக்கள் இருக்கின்றனர். ஆனால் இத்திட்டத்தின் மூலம் படித்தவர்களுக்கு மட்டுமே வேலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. எனவே, இந் நிறுவனத்தால் மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படும். கடல் நீரும் ஊருக்குள் புக வாய்ப்பு உள்ளது. இப்பொழுது தேலைவயான அளவு மின் உற்பத்தி இருப்பதனால் இந்த திட்டத்தை வேறு பகுதிக்கு கொண்டு செல்ல வேண்டுகிறேன்.

6. திரு. விஸ்வநாதன், வேட்டைக்காரனிருப்பு:

இத் திட்டம் வருவதை முழு மனதோடு ஆதரிக்கிறேன். எண்ணூர் அனல் மின் நிலையத்தை சென்று பார்வையிட்டோம். அங்கு புங்கை, வேப்ப மரம், தென்னை மரம் ஆகியவை அமைந்துள்ளன. அங்கு 40 முதல் 50 குடும்பங்கள் வாழ்கின்றனர். இப்பகுதியானது காவிரின் கடைமடை பகுதியாக இருப்பதால் கடந்த 20 ஆண்டுகாலமாக விவசாயம் நல்ல முறையில் செய்ய முடியவில்லை. எனவே இத்திட்டத்தை தமிழக முதல்வர் எங்கள் பகுதிக்கு வரப்பிரசாதமாக அளித்தாக ஏற்றுக் கொள்கிறோம்.

7.திருமதி. பரமேஸ்வரி, மாவட்ட கவுன்சிலர்:

இத்திட்டம் இங்கு அமைவதை எதிர்கிறேன். இத்திட்டம் இங்கு அமைந்தால் பொறியியல் துறையில் படித்தவர்களுக்கு மட்டுமே சில வேலை வாய்ப்புகள் கிடைக்கும். இத்திட்டத்தினால் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்பால் மா பலா மற்றும் முந்திரி வகைகள் பாதிக்கும். மேலும் இங்குள்ள உள்ள மீனவர்கள் பொருளாதாரம் பாதிக்கக் கூடும். ஆகவே அனல் மின் நிலையம் வேண்டாம்.

8.திரு. தமிழ்ச் செல்வன், காமேஸ்வரம் கிராமம்:

இத் திட்டத்தினர் விரிவான உரையை (Project Report) தமிழில் அச்சிட்டு வெளியிட வேண்டும். இத் திட்டம் அமைய உள்ள இடமானது குடியிருப்பு பகுதிகளாகவும் ஒதுக்கி வைத்த வனப் பகுதியாக (Reserved Forest Area) உள்ளது. இந் நிறுவனத்தின் மூலம் வெளியேற்றப்படும் சாம்பல் கழிவுகளினால் புற்றுநோய், மலட்டுத் தன்மை மற்றும் பிறப்பு விகிதம் குறைய வாய்ப்பு உள்ளது. இத்திட்டத்தினர் தடுப்பு சுவர் அமைக்காமல், கழிவு நீரை வெளியேற்றும்போது அரிச்சந்திரா நதியில் கலப்பதன் மூலம் நீரானது மாசு அடைவதோடு நிலத்தடி நீரும் மாசு அடையும்..ஆகவே இத்திட்டம் அமைவதை எதிர்கிறேன்.

அப்பொழுது **மாவட்ட ஆட்சியர்** இத் திட்டத்தை அமுல் படுத்தும் நிறுவனத்தினர் விளக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். ஆனால் பொது மக்கள் இது கருத்து கேட்புணர்வு கூட்டம் ஆகவே, எங்களுக்கு விளக்கம் தேவையில்லை , மக்களின் கருத்துக்களை கேட்க வேண்டும் என எதிர்ப்பு தெரிவித்தனர். ஆகவே **மாவட்ட ஆட்சியர்** பொது மக்களை கருத்தினை தொடர்ந்து தெரிவிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்கள்.

9. திருமதி ரேவதி ஜீவானந்தம், ஒன்றிய குழு உறுப்பினர்:

இத்திட்டம் இங்கு அமைவதை எதிர்கிறேன். இதனால் பசுமையான இப்பகுதிகள் பாதிக்கப்படும். உள்நாட்டு மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படும். இதன் மூலம் வெளியேற்றப்படும் சாம்பல் கழிவுகளினால் இரால் வளர்ப்பு பாதிக்கப்படும். வெளிநாட்டு கம்பெனியினர் கொள்ளை லாபம் அடைவதற்காகவே இத் திட்டம் அமைகிறது. இத்திட்டம் அமையுமானால் எங்கள் பகுதிகள் பாதிக்கப்படும். சொந்த மண்ணிலேயே எங்களை அகதிகளாக ஆக்குகிறார்கள். அதனால் உயிரை பனையம் வைத்தாவது இத் திட்டம் அமைவதை எதிர்ப்போம்.

10. திரு. சித்திரைவேல், புதுப்பள்ளி

இத்திட்டம் அமைவதை வரவேற்கிறோம். இப் பகுதி மக்கள் வருமையில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வாய்ப்பு உள்ளது. இத்திட்டத்தால் இப்பகுதி மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள். இத் திட்டத்தை தற்சமயம் எதிர்ப்பவர்கள் பிற்காலத்தில் ஏற்பட இருக்கும் பொன்னான வாய்ப்பை இழக்க வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய கிராம வளர்ச்சி அடைய இத்திட்டம் மிகவும் அவசியம் ஆகிறது.

11.திரு. பூமாலை, விழுந்தமாவடி:

இத் திட்டம் வருவதை எதிர்கிறேன். இந் நிறுவனம் அமைவதால் மக்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும் என்பதெல்லாம் ஒரு மாயை. ஓ.என்.சி நிறுவனத்தார் வேலை வாய்ப்பு வசதியை கொடுக்கவில்லை. அதுபோல பிள்ளை பெருமாள்நல்லூரில் அமைந்துள்ள மின் நிலையத்தில் 72 நபர்கள் வேலை செய்கின்றனர். அதில் உள்ளூர் மக்கள் 2 பேருக்கு வாட்சுமேன் வேலை வழங்கப்பட்டுள்ளது. அதுபோல நெய்வேலியில் உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. எங்களுடைய விழுந்தமாவடியில் இருந்து, இத் திட்டம் அமைய உள்ள இடத்தை சுற்றியுள்ள காரப்பிடாகை, மேலப்பிடாகை மற்றும் வேட்டைக்காரணிருப்பு பகுதியில் உள்ள மக்களுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. இத்திட்டம் இப்பகுதியில் அமையுமானல் நிலத்தடி நீர் பாதிக்கப்படும் என்பதை உணர வேண்டும்.

எண்ணூர் அனல் மின் நிலையத்தை சென்று பார்வையிட்ட போது அந்த இடத்தினை சுற்றி உள்ள பகுதிகளில் எவ்வித குடியிருப்பும் இல்லை. அந்த அனல் மின் நிலையத்தில் 600 நபர்கள் வேலை இழந்தார்கள். அதில் தற்சமயம் 1700 நபர்கள் வேலை செய்து வருகிறார்கள். அரசு நிறுவனத்திலேயே வேலை இழந்த சமயத்தில் எப்படி தனியார் நிறுவனத்தினரை நம்புவது. இத்திட்டம் இப் பகுதியில் ஏற்படுமானல் சுனாமி போன்ற பேரழிவு ஏற்பட்ட அனுபவம்தான் எங்களுக்கு ஏற்படும்.

சாம்பல் கழிவுகளினால் பெரும் பாதிப்புதான் ஏற்படும். ஆகவே இத்திட்டத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்து கொள்ள வேண்டுகிறேன். இல்லையெனில் இரால் நிலம் மற்றும் விவசாய நிலங்கள் பாதிக்கப்படக் கூடும்.

12. திருமதி.A.ஜேசுரத்தினம்: Coastal Action Network, Nagapattinam.

a. மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை 21.08.2009 அன்று வெளியிட்ட குறிப்பாணையில் 31.10.2009 வரை கடலோர பிரதேசங்களில் எந்தவிதமான தொழிற்சாலையும் அமையக் கூடாது என்று அறிவுறுத்தியுள்ளது.சுற்றுச் சூழல் தாக்க அறிக்கையில் மக்களுக்கு ஏற்படும் பொருளாதார சீர்கேடுக்கு எந்தவிதமான தீர்வு காணப்படவில்லை.

b. மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அளித்த நிபந்தனைகளை நிறைவேற்றவில்லை.

c. இத்திட்டம் வந்தால் எண்ணூர் மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையம் அருகில் இருந்த மீனவர்கள் இழந்ததைப்போல் நாங்களும் இழப்போம்.

d. மின்சார துறை 2007-அம் ஆண் அறிக்கையின்படி போதுமான மின் உற்பத்தி இருப்பதாக அறிவித்தார்கள். தற்சமயம் (2009-ஆம் ஆண்டில்) மின் உற்பத்தி அதிகரித்திருக்க வேண்டும்.

e. பற்றாக்குறை இருந்தால் நிலக்கரியை பயன்படுத்தி அனல் மின் நிலையம் அமைப்பதை விட சூரிய ஒலியின் மூலம் மின்சாரத்தை உற்பத்திச் செய்யலாம்.

f. இத் திட்டத்தால் எந்தவிதமான வேலை வாய்ப்பு கிடைக்க வாய்ப்பு இல்லை. ஆதலால் இத்திட்டத்தை இரத்து செய்ய வேண்டும்.

g. இம் மாவட்டத்தில் நிலக்கரியை பயன்படுத்தி ஏழு அனல் மின் நிலையம் அமைய வேண்டியதன் அவசியம் என்ன? ஆதனால் இத்திட்டம் வருவதை இரத்து செய்யவேண்டும்.

13. ஆர். முத்துகுமாரசாமி, காரப்பிடாகை வடக்கு ஊராட்சி மன்ற தலைவர்:

இத்திட்டம் அமைவதை வரவேற்கிறேன். இத்திட்டம் இங்கு அமைவதால் விவசாயத்திற்கு எவ்வித பாதிப்பும் இல்லை. புதுப்பள்ளியில் அமைந்துள்ள இரால் பண்ணைகள் காரணமாக நமது நிலங்கள் தரிசு நிலமாக மாறிவிட்டது. வேலை வாய்ப்பு அதிகரிக்கும் என்ற நல்ல நோக்கத்தோடு இப்பகுதியில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இத் திட்டத்தை கொண்வந்தார்கள். ஆகவே இத்திட்டத்தை வரவேற்கிறேன்.

14. திரு. வேதையன், முன்னால் ஒன்றிய குழு உறுப்பினர்:

இத்திட்டம் அமைவதை எதிர்கிறேன். இத்திட்டத்தினர் காற்றின் புகை போக்கியின் உயரத்தை 225 என்று தெரிவித்துள்ளார்கள். இத்திட்டதால் 1.7 கி.லிட்டர் கழிவுகள் கடலில் கலக்க வாய்ப்புள்ளது. தற்சமயம் காரப்பிடாகையில் தண்ணீர் தட்டுப்பாடு உள்ளது. இத்திட்டத்தினர் துறைமுகம் அமைவதற்காக கடலினை ஆழப்படுத்தும்போது கிடைக்கும் மணலை நிலப்பரப்பில் பரப்பும்போது நிலத்தடி நீரில் பாதிப்பு ஏற்படும்.

15. திரு.இராமமூர்த்தி, ஒன்றிய குழு முன்னாள் உறுப்பினர்:

இத்திட்டம் அமைவதை எதிர்கிறேன். எண்ணூர் அனல் மின் நிலையத்தை சுற்றி பார்வையிட்டபோது அப்பகுதியை சுற்றி எவ்வித குடியிருப்புகளும் அமையவில்லை. 210 மெ.வா. அளவு மின் உற்பத்தி செய்யும் அப்பகுதியிலேயே 6 கி.மீ. முதல் 10 கி.மீ. வரை எவ்வித குடியிருப்பகளும் இல்லை. எங்களுடைய பகுதியானது விவசாயம் சார்ந்த தொழில் பகுதியாகும். இப்பகுதியில் அதிக அளவு படித்தவர்கள் இல்லை. இந் நிறுவனத்தின் மூலம் பொறியியல் படித்தவர்களுக்கு மட்டுமே வேலை கிடைக்கும், மற்றவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு இல்லை. இப் பகுதியில் உள்ள முத்துப்பேட்டை சதுப்பு நிலக் காடுகள் பாதிக்க வாய்ப்பு உள்ளது.

16. திரு. எஸ். எம். வல்லத்தரசு, பஞ்சாயத்து தலைவர், கீழப்பிடாகை:

இத்திட்டம வருவதை வரவேற்கிறேன். இத்திட்டத்தால் விவசாய நிலம் பாதிக்கப்படாது. பொருளாதாரம் வளர்ச்சியடையும். ஆகவே, இத்திட்டத்தை ஆதரிக்கிறேன். இத்திட்டம் வரவில்லை என்றால் தீக்குளிக்கவும் தயாராக உள்ளளேன்.

17. திரு. எம். பெத்தையா, கீழப்பிடாகை:

இத்திட்டம் அமைவதை எதிர்க்கிறேன். இத்திட்டத்தினால் இரால் வளர்ப்பு பாதிக்கப்படும். ஓசோன் படலமே பாதிப்பு அடைந்துள்ளது. இப்பகுதியில் 5,000 மக்கள் வசித்து வருகிறார்கள். இத்திட்டத்தால் இப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. ஆகவே இத்திட்டத்தால் வேலை வாய்ப்பு கிடைக்காது. ஆதலால் இத்திட்டத்தை வேறு இடத்தில் மாற்றிக் கொள்ள வேண்டும்.

18. திருமதி. மல்லிகா, கீழப்பிடாகை ஊராட்சி உறுப்பினர்:

இத்திட்டத்தை வரவேற்கிறேன். விவசாயம் கடுமையாக பாதிப்பு அடைந்த நிலையில் இத்திட்டம் வருவதால் இப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும்.

19. திரு. முசிப் ஷரீப், வேட்டைக்காரணிருப்பு:

இத்திட்டம் வருவதை நான் எதிர்கவில்லை. ஆனால் இவ் நிறுவனத்தினர் மேலும் பல விவரங்களை எனக்கு அளிக்க வேண்டுகிறேன்.

01. இந்த நிறுவனத்தினர் எத்தனை ஏக்கர் நிலத்தினை கையகப்படுத்தி உள்ளனர்.

02. இத்திட்டத்தின் விவரங்களை தமிழில் வெளியிட்டால் சந்தேகங்களுக்கு தீர்வு காண முடியும்.

03. அனல் மின் நிலைத்திற்கும், அணு மின்நிலையத்திற்கும் உள்ள வேறு பாடுகளை விளக்க வேண்டும்.

04. இத்திட்டதின் விவரங்களை அரசுக்கு மட்டும் கொடுக்கிறீர்கள். ஏன் பொது மக்களுக்கு வழங்கவில்லை.

05. தூத்துக்குடியில் உள்ள அனல் மின்நிலையம் நிலம் வழங்கிய அப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கவில்லை.

06. எத்தனை தனியார் நிறுவனங்கள் பொது மக்களுக்கு வேலை வாய்ப்பினை கொடுத்துள்ளது?

07. இப்பகுதியானது டெல்லா நிலப் பகுதியாகும். ஆகவே தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வெள்ளை அறிக்கையை வெளியிட வேண்டும்.

08., கூட்டத்தின்போது ஏன் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கூட்ட அறிக்கையினை (Minutes)) வழங்கவில்லை.

09. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இத்திட்டத்தின் முழுமையான விபரத்தினை வெளியிடவேண்டும்.

10. இப்பகுதி கடலோர மாவட்டமாக இருப்பதால் இத்திட்டத்தினை துவக்க இருப்பவர்கள் வேறு பகுதிக்கு மாற்றிக் கொள்ள பரிசீலணை செய்ய வேண்டும்.

20. திரு. ஏ.வி. முருகையன், வெண்மனச்சேரி, முன்னால் மாவட்ட ஒன்றியக் குழு உறுப்பினர்:

இத்திட்டம் வருவதை வரவேற்கிறேன். தற்சமயம் மின்சாரம் தேவைப்படுகிறது. மனைவி இல்லாமல் கூட வாழ்ந்துவிடலாம், ஆனால் மின்சாரம் இல்லாமல் வாழமுடியாது.

இத்திட்டம் அமையயுள்ள 10 கி.மீ. தூரத்தில் உள்ள கிராமங்களாகிய பிரதாபராமபுரம், திருப்பூண்டி போன்ற பகுதிகள் பாதிக்கப்பட கூடும் என தெரிந்தால் அப்பகுதி மக்களையும் அழைத்து மற்றொரு பொது மக்கள் கருத்து கேட்புணர்வு கூட்டம் நடத்த வேண்டும்.

21. திரு. எஸ். இராமசாமி, விழுந்தமாவடி:

இத்திட்டம் அமைவதை வரவேற்கிறேன். எங்களுடைய விவசாய நிலங்களில் தற்போது விவசாயம் செய்ய முடியாமல் வருமானம் இன்றி வாழ்கின்றனர். மேலும் இத்திட்டம் அரசு புரம்போக்கு தரிசு நிலத்தில் அமைவதால் எங்கள் பகுதி மக்கள் வரவேற்பார்கள்.

இந்த பொது மக்கள் கருத்து கேட்டுணர்வு கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் உதவி சுற்றுச் சூழல் பொறியாளர் (கூட்ட அமைப்பாளர்) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், நாகப்பட்டினம் அவர்கள் நன்றியுரை ஆற்றி இக் கூட்டத்தின் அறிக்கையினை வாரியத்தின் மூலமாக மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என கூறி கூட்டத்தை நிறைவு செய்தார்.

உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், நாகப்பட்டினம்.	மாவட்ட ஆட்சியர், நாகப்பட்டினம்.